**உடுபத்தாவ பிரதேச சபை**
**குருநாகல் மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 30 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 30 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தம்பர் 07 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் உடுபத்தாவ பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் களஞ்சிய இருப்புக் கணக்கின் மீதி ரூபா 60,226 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) சபையினுள் வருமானம், நிதி மற்றும் இருப்பு மகாமைத்துவ மென்பொருள் முறைமையை ஸ்தாபித்தமைக்காக ரூபா 1,309,857 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அச்செலவினம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான ரூபா 65,000 பெறுமதியான நீர்ப் பம்பி மற்றும் ரூபா 18,500 பெறுமதியான ஏணி என்பன மீளாய்வாண்டின் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கணக்கு மற்றும் களஞ்சிய இருப்பு கணக்கு ஆகிய இரண்டு கணக்குகளிலும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

04 கணக்கு விடயங்களுக்குரிய அட்டவணைகளின் மீதிகள் நிதிக்கூற்றுக்களின் மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 1,046,805 ஆன இணக்கமின்மைகள் காணப்பட்டன.

#### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 40,617,812 ஆக இருந்ததுடன், நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வுத் திகதியான 2016 யூலை 07 ஆந் திகதி வரையிலும் ரூபா 18,066,682 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய மீதிகளின் பெறுமதி ரூபா 7,245,361 ஆக இருந்ததுடன், 4 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் காணப்படும் மீதிகளின் பெறுமதி ரூபா 775,375 ஆக இருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 5,045,219 கூட்டுத்தொகையான 04 கணக்கு விடயங்களுக்குரிய விரிவான அட்டவணைகள் மற்றும் காலப்பகுப்பாய்வு என்பன கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மை

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 154(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபை எல்லையிலான காணி விற்பனையிருந்து கிடைத்த பணத்தில் 01 சதவீதம் பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டும். மீளாய்வாண்டின் போது காணி ஏல விற்பனையிருந்து ரூபா 511,963 தொகை அறவிடப்பட வேண்டிய போதிலும் ரூபா 61,220 மாத்திரம் அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 14,716,017 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,475,444 ஆக காணப்பட்டது. மீளாய்வாண்டு மற்றும் மன்னைய ஆண்டுகளில் முறையே ரூபா 6,516,067 மற்றும் ரூபா 16,525,439 ஆன மூலதன உதவிகள் மற்றும் ரூபா 7,026,741 தொகையும் ரூபா 17,462,157 தொகையான மூலதனச் செலவினம் கணக்கிடப்பட்டதன் பின்னர் அம்மிகை முறையே ரூபா 14,205,343 மற்றும் ரூபா 5,538,726 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 8,666,617 ஆன அதிகரிப்பொன்று தென்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிச் செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் உரிய முரண்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | வருமானம் | | | | செலவினம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | 2015 | 2014 | முரண் | செலவின விடயம் | 2015 | 2014 | முரண் |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | உழைத்த வருமானம் | 14,080 | 13,829 | 251 | தனிப்பட்ட வேதனம் | 38,807 | 29,314 | 9,493 |
| (ii) | ஏனையவை | 53,118 | 35,550 | 17,568 | ஏனையவை | 13,675 | 13,589 | 86 |
| | உப மொத்தம் | 67,198 | 49,379 | 17,819 | உப மொத்தம் | 52,482 | 42,903 | 9,579 |
| (iii) | மூலதன வருமானம் | 6,516 | 16,525 | (10,009) | மூலதன செலவினம் | 7,027 | 17,462 | (10,435) |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | ---------- | ----------- | ------------- | | ----------- | ----------- | ------------ |
| மொத்தம் | 73,714 | 65,904 | 7,810 | மொத்தம் | 59,509 | 60,36 | (856) |
| | ====== | ====== | ===== | | ====== | ===== | ====== |
| நிதி விளைவு | 14,716 | 6,476 | 8,240 | மிகை | 14,205 | 5,539 | 8,666 |

(ஆ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமாகிய ரூபா 67,198,407 தொகையில் அண்ணளவாக 79 சதவீதமான ரூபா 53,117,935 தொகை சபையினால் உருவாக்கிய வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற படிகள் தன்மையுள்ள பெறுவனவுகளினை அடக்கியுள்ளது. மூலதன வருமானமாகிய ரூபா 6,515,067 ஆன மொத்தத் தொகையும் வேறு நிறுவனங்களின் மூலம் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்கு கிடைக்கப்பெற்ற பணத்தினை அடக்கியுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவினமான ரூபா 52,482,390 தொகையில் அண்மித்த 74 சதவீதமான ரூபா 38,806,863 தொகை தனிப்பட்ட சம்பளத்திற்காக செலவிடப்பட்டிருந்தது.

(இ) மூலதனச் செலவினமான ரூபா 7,026,740 ஆன மொத்த அளவும் பிரதேச சபைகளை பலப்படுத்தல், மாகாண முதலீடுகள் போன்ற மூலங்கள் பேரில் ஏனைய நிறுவனங்களிலிருந்து மேற்கொண்ட அபிவிருத்தி செயற்பாடுகளை உள்ளடக்கியிருந்தது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானமும் உள்ளபடியான வருமானமும்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் நிலுவை வருமானம் என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015 மதிப்பிடப் பட்டது | 2015 உள்ளவாறான | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய பற்றாக்குறை | 2014 மதிப்பிடப்பட்டது | 2014 உள்ளவாறான | 2014 திசெம்பர் 31 இல் உள்ளாறு திரட்டிய பற்றாக்குறை |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) வீதவரியும் வரியும் | 1,586 | 1,943 | 357 | 1,272 | 1,813 | 6,023 |
| (ii) குத்தகை வாடகை | 9,925 | 8,309 | 1,616 | 10,000 | 8,431 | 129 |
| (iii) அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 606 | 691 | 85 | 1,090 | 642 | - |
| (iv) ஏனைய வருமானம் | 51,389 | 56,255 | 4,866 | 46,932 | 38,490 | 19,998 |
| | 63,506 | 67,198 | 6,924 | 59,294 | 49,376 | 26,150 |

## 2.3.2 பட்டியலிடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

வருமானம்

| தலைப்பு | பட்டியிலிடப்பட்ட வருமானம் | | | சேகரித்த வருமானம் | | | | நிலுவை வருமானம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015/01/01 இல் நிலுவை | ஆண்டில் பட்டியலிட்டது | மொத்தம் | 2015/01/01 இல் நிலுவை | ஆண்டில் பட்டியலிட்டது | அடுத்த வருடத்திற்காக கிடைத்த பணம் | மொத்தம் | 2015/01/01 இல் நிலுவை | பட்டியிலிடப்பட்ட வருமானத்தில் சேகரித்த வருமானம் | 2015/12/01 இல் நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி | 260,631 | 763,380 | 1,024,011 | 97,865 | 692,299 | 93,315 | 883,479 | 162,766 | 71,081 | 233,847 |
| ஏக்கர் வரி | 342,699 | 42,595 | 385,294 | 19,804 | 7,629 | 4,272 | 31,705 | 322,894 | 34,966 | 357,860 |
| குத்தகை வாடகை | 112,555 | 1,998,194 | 2,110,749 | - | 1,290,296 | 8,850 | 1,299,146 | 112,555 | 707,898 | 820,453 |
| வாடகை | 177,400 | 421,800 | 599,200 | 6,400 | 412,400 | - | 418,800 | 171,000 | 9,400 | 180,400 |
| முத்திரைக் கட்டணம் | 21,044,863 | 8,000,000 | 29,044,863 | 3,190,991 | - | - | 3,190,991 | 17,853,872 | 8,000,000 | 25,853,872 |
| நீதிமன்றத் தண்டம் | 2,106,627 | 4,054,484 | 6,161,111 | 2,106,627 | 153,834 | - | 2,260,461 | - | 3,900,650 | 3,900,650 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | - | 320,850 | 320,850 | - | 320,850 | - | 320,850 | - | - | - |
| நீர்க் கட்டணங்கள் | 134,029 | 134,390 | 268,419 | 118,184 | 104,565 | 330 | 223,079 | 15,845 | 29,825 | 45,670 |
| ஏனைய | - | 11,490,621 | 11,490,621 | - | 11,490,621 | - | 11,490,621 | - | - | - |
| மொத்தம் | 24,178,804 | 27,226,314 | 51,405,118 | 5,539,871 | 14,472,494 | 106,767 | 20,119,132 | 18,638,932 | 12,753,820 | 31,392,752 |

(அ) 2014 ஆம் ஆண்டில் வீதவரி ரூபா 260,631 ஆன நிலுவை மீதியொன்று காணப்பட்டதுடன் அதில் மீளாய்வாண்டில் ரூபா 97,865 அதாவது நிலுவை வீதவரியில் 37 சதவீதம் மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் ரூபா 342,699 ஆன நிலுவை மீதியொன்றாக காணப்பட்டதுடன் அதில் மீளாய்வாண்டில் ரூபா 19,804 அதாவது நிலுவை வீதவரியில் 06 சதவீத ஏக்கர் வரி சேகரிக்கப்பட்டிருந்தது.

(இ) 2014 ஆம் ஆண்டில் ரூபா 112,555 ஆன நிலுவை குத்தகை வாடகை மீதியொன்று காணப்பட்டதுடன் அதில் மீளாய்வாண்டில் எவ்வித வரியும் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2014 ஆம் ஆண்டில் ரூபா 177,400 ஆன நிலுவை வாடகை மீதியொன்று காணப்பட்டதுடன் அதில் மீளாய்வாண்டில் ரூபா 6,400 அதாவது நிலுவை வாடகையில் 4 சதவீதம் சேகரிக்கப்பட்டிருந்தது.

**2.3.3 வாடகை**

(அ) குறைந்த கூறுவிலை ரூபா 454,020 இற்கான 18 சொத்துக்களை 2015 ஆம் ஆண்டிற்காக குத்தகைக்கு வழங்க முடியாமையால் சபைக்கு நட்டமேற்பட்டிருந்தது.

(ஆ) 2011 ஆகஸ்ட் 24 ஆந் திகதி முறையான உடன்படிக்கையொன்று மூலம் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த தும்மளசூரிய பொது வர்த்தகத் தொகுதி 01 ஆம் இலக்க கடையில் 2012 சனவரி முதல் வேறு ஒரு நபர் அத்துமீறி குடியிருந்த காரணத்தினால் சட்டரீதியான குத்தகையாளரால் 2012 சனவரி முதல் வாடகை கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. 2001 ஆம் ஆண்டிலிருந்து குத்தகைக்கு எடுத்த நபர் குத்தகை உறுதியொன்றின் மூலம் வேறு ஒரு நபருக்கு கையளித்தமை அனுமதியற்ற குடியிருப்பிற்கு காரணமாக இருந்தமை வெளிப்படுத்தப்பட்டதுடன், இவ்வாறு உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு முரணாக உப குத்தகைக்கு வழங்குதல் சட்டரீதியாக மேற்கொள்ளப்படாமல் 2011 ஆம் ஆண்டின் போது வாடகை ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டதன் பேரில் இந்த சிக்கலான நிலைமை உருவாகியிருந்தது. அதன் பிரகாரம் 2016 மே 03 ஆந் திகதி வரையிலும் அறவிட வேண்டியிருந்த வரித்தொகையின் பெறுமதி ரூபா 212,850 ஆக இருந்தது.

**2.3.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணத் தொகை ரூபா 3,900,650 ஆக காணப்பட்டதுடன், முத்திரைக் கட்டணங்கள் ரூபா 25,853,872 ஆக இருந்தது. 2016 மார்ச் 31 ஆந் திகதி வரை கிடைக்க வேண்டிய மீதிகள் முறையே ரூபா 3,716,982 மற்றும் ரூபா 13,500,000 ஆக இருந்தது.

**2.3.5 தொலைபேசி கோபுர கட்டண வருமானம்**

2015 ஆம் ஆண்டு வரை சபை அதிகாரப் பிரதேசத்தில் 09 தொலைபேசி கோபுரங்கள் ஸ்தாபிக்கப்பட்டிந்தமை இனங்காணப்பட்டிருந்த போதிலும் இக்கோபுரங்களுக்காக உரிய கட்டணங்களைச் செலுத்தி அபிவிருத்தி உத்தரவுப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இக்கோபுரங்கள் மூலம் வருடாந்த வியாபார மற்றும் அனுமதிப்பத்தரக் கட்டணங்களும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.3.6 காணி துண்டாக்கப்பட்டு விற்பனை செய்வதில் 1 சதவீத வரித் தொகை

மஹா லெட்சுமி தோட்டத்தின் 1 காணி மற்றும் தம்கஹமுலஹேன 02 ஏக்கர் காணி துண்டாக்கப்பட்டு விற்பனைக்காக சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த குறைந்த வருமானத்தில் முறையாக ரூபா 65,250 தொகை மற்றும் ரூபா 85,284 உமாக ரூபா 150,534 தொகை குறைத்து அறவிடப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையில் சேவை புரிந்த ஊழியர்களுக்காக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை கொடுப்பனவு தாமதம் காரணமாக சபைக்கு விதிக்கப்பட்டிருந்த ரூபா 156,791 ஆன மிகை கட்டணத் தொகையில் ரூபா 69,000 தொகை உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்ததுடன் மேலும் அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 87,791 ஆக இருந்தது.

(ஆ) ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு வேண்டிய பங்களிப்புத் தொகை தாமதம் காரணமாக சபைக்கு அந்நிதியத்தினால் விதிக்கப்பட்டிருந்த ரூபா 22,469 ஆன மிகை கட்டணம் விதிக்கப்பட்டிருந்ததுடன், பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 5,000 தொகை அறவிடப்பட்டிருந்தது.

(இ) புறநெகும நிதிஏற்பாட்டின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட 2015 திசெம்பர் 11 ஆந் திகதி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த 03 மாடியுடன் கூடிய பலநோக்கு கட்டிடம் கணக்காய்வு திகதியான 2016 யூலை 01 ஆந் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது. இக்கட்டிடம் பகல்நேர பாதுகாப்பு நிலையமொன்று, ஆயுர்வேத நிலையமொன்று, சிகிச்சை நிலையமொன்று போன்ற பொது நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்கு ஆலோசணை வழங்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான பொது நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) PB-4861 ஆம் இலக்க வேன் வண்டியை திருத்தம் செய்யப்படாமல் 2015 பெப்ரவரி மாதம் முதல் கணக்காய்வு திகதியான 2016 யூலை 01 ஆந் திகதி வரையிலும் ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

(உ) சபைக்குச் சொந்தமான RS-1220 ஆம் இலக்க JCB இயந்திரம் திருத்த வேலைகளுக்காக வெலிவேரிய தனியார் நிறுவனமொன்றுக்கு 2015 திசெம்பர் 07 ஆந் திகதி அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதியான 2016 யூலை 01 ஆந் திகதி வரையிலும் திருத்தயமைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ரூபா 1,004,062 தொகை செலவு செய்து 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த அச்சுக்கல் உற்பத்தி செயற்திட்டத்திலிருந்து 2012 ஆம் ஆண்டிலிருந்தே போதியளவு நலன்களை அடைந்து கொள்ளத் தவறியிருந்தது. 2015 ஆம் ஆண்டில் பொருட்கள் கொள்வனவிற்காக ரூபா 52,448 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், 573 பிலொக் கற்கள் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தன.

(எ) சபைக்காக வருமானம், நிதி மற்றும் இருப்பு முகாமைத்துவ மென்பொருள் முறைமையை அறிமுகப்படுத்துவதற்காக கணனி மென்பொருள் வழங்கும் நிறுவனமொன்றுடன் ரூபா 850,000 தொகைக்கு 2012 ஆகஸ்ட் 20 ஆந் திகதி உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருந்த தொகையில் ரூபா 412,778 தொகை குறித்த நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. உடன்படிக்கை பிரகாரம் ஓராண்டு காலம் மாத்திரம் இலவசமாக சேவை வசதிகள் வழங்கப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், சேவை உடன்படிக்கை முடிவடையும் திகதி

உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மேற்குறித்த மென்பொருள் முறைமைக்குரிய ரூபா 850,000 இற்கு மேலதிகமாக கணனி வலையமைப்பு ஏற்படுத்தல், சேர்வர் இயந்திரம் கொள்வனவு செய்தல், கணனி மற்றும் UPS இயந்திரம் என்பவற்றை கொள்வதற்காக ரூபா 1,241,838 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், உரிய நிகழ்ச்சித்திட்டம் கணக்காய்வுத் திகதியான 2016 யூலை 01 ஆந் திகதி வரையிலும் செயற்படுத்தும் நிலைமையில் காணப்படவில்லை.

(ஏ) 2015 நவம்பர் 12 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின்போது களஞ்சியத்தில் பயன்பாட்டிற்காக வழங்குவதற்கு இருந்த பொருட்கள் மற்றும் உடைந்த பொருட்கள் என முறையாக களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கவில்லை. சபை வளவில் நீர் வழிந்தோடல் களஞ்சியப் பகுதிக்கு திருப்பப்பட்டிருந்ததால் மழை நீர் களஞ்சியத்திற்குள் செல்லக் வாய்ப்பு காணப்படுகின்றது. மேலும் 2013 யூலை 07 ஆந் திகதி உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து நன்கொடையாக கிடைக்கப்பெற்றிருந்த 10 நடமாடும் பல்நோக்கு கூடங்கள் 2015 சனவரி முதல் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஐ) 2014 நவம்பர் 28 ஆந் திகதி பிங்கிரிய பிரதேச சபையிடமிருந்து கிடைத்து உறுப்பினர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த 117 கொடிக் கம்பங்கள் சபைக்கு கையளிக்கப்படாதிருந்ததுடன், அக்கொடிக் கம்பங்கள் பதிவேடுகளிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2. மனித வளங்கள் முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளபடியான | வெற்றிடங்கள் | மிகை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 02 | 02 | - | - |
| மூன்றாம் நிலை | 39 | 31 | 10 | 02 |
| இரண்டாம் நிலை | 50 | 54 | 05 | 09 |
| ஆரம்ப நிலை | - | 03 | - | 03 |
| மொத்தம் | 91 | 90 | 15 | 14 |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தினுள் போதியளவு உள்ளகக் கணக்காய்வு இடம்பெற்றிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்